# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

Sessions Case No.43/2023

Deposition of witness – PW5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ரமேஷ் | Caste | : | |
| S/o. | : | பெரியசாமி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed on 01.11.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை;

நான் கருத்தராஜபாளையத்தில் குடியிருக்கிறேன். சம்பவ சமயம் நியாய விலை கடையில் சேல்ஸ்மேனாக வேலை செய்து வந்தேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். அவர் பக்கத்து ஊரை சேர்ந்தவர். அதனால் அவரை எனக்கு அடையாளம் தெரியும். 1வது சாட்சி செந்தில்குமாரை எனக்குத் தெரியும். அவரும் பக்கத்து ஊர்க்காரர் ஆவார்.

சுமார் 3 வருடங்களுக்கு முன்னர் வேறு வேலையாக காவல்நிலையத்திற்கு சென்றேன். அங்கிருந்த போலிஸ்காரர் ஒருவர் எழுதப்படாத வெள்ளை காகிதத்தில் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. அதில் எழுதப்பட்டுள்ள சங்கதிகள் பற்றி தெரியாது. நான் கையெழுத்து மட்டுமே செய்து கொடுத்தேன். மேற்படி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அந்த விசாரணையில் 18.08.2022ம் தேதி மாலை 4.00 மணி அளவில் நியாய விலை கடையில் இருக்கும்போது செந்தில்குமார் வீட்டிற்கு அருகில் போலிசார் விசாரிப்பதை பார்த்து அருகில் சென்று விசாரிக்கும்போது செந்தில்குமார் கொடுத்த புககார் வாக்குமூலத்தின் பேரில் வழக்கு பதிவு செய்து சம்பவ இடத்தை ஆய்வாளர் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்வதாகவும், அதற்கு என்னையும் முகிலரசனையும் சாட்சிகளாக இருக்கச்சொல்லி கேட்டதன் பேரில் போலிசார் தயார் செய்த பார்வை மகசரில் கையொப்பம் செய்தேன் என்று வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற வேண்டி வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.